# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 14–ஆம் நாள், திங்கட்கிழமை

**இ.ம.எண். 5/2023 இன் அ.வ.எண்.162/2013**

## CNR No. TNSA13-000259-2013

மணிமேகலை ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சின்னத்தம்பி
2. அலமேலு
3. மாணிக்கம்
4. பிரபாகரன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 10.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.திருமாவளவன் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு திரும்ப பெறப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்/வாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் சாட்சிய பிரமாணவாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>

மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி என்றும், அவர் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளதாகவும், 1, 2 பிரதிவாதிகளாக இருந்த மனுதாரரின் மாமனார் சின்னதம்பி, மாமியார் அலமேலு ஆகியோர்கள் மீது தாக்கல் செய்திருந்த வழக்கை அவர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் தேவையில்லை என்று வாபஸ் பெற்றுக்கொண்டதாகவும், மனுதாரர் மற்றும் அவரது குடும்ப நபர்களான சின்னதம்பி, மாணிக்கம் ஆகிய மூவரும் 21.05.2004–ல் பாக பத்திரம் எழுதி அனுபவம் செய்து வருவது குறித்து ஏற்கனவே தாக்கல் செய்த சாட்சிய பிரமாணவாக்குமூலத்தில் சொல்லாமல் விடுபட்டுவிட்டதால் மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சிய பிரமாணம் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது அவசியம் என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாணவாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

3. <u>4 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 4 ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், கூடுதல் சாட்சிய பிரமாண வாக்குமூலம் அவசியமற்றது என்றும், மனுதாரர், 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கைத் திரும்பப் பெற்றுள்ளதாகவும், மேலும் வழக்கு சொத்துக்களில் சட்டப்பூர்வ பங்குதாரராக இருக்கும் இரண்டாவது பிரதிவாதி, பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒரு தரப்பினராக இல்லாததால், 21.05.2004 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும், இந்த மனுவானது வாதியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடித்த பின்பு குறைபாடுகளை பூர்த்தி செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/வாதி கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய முரண்தடை செய்யப்படுகிறார் என்றும், எனவே எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர்/வாதி தனது மனுவில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை திரும்ப பெற்றுவிட்டதாகவும், 21.05.2004 ல் மனுதாரர்/வாதி, 1, 3 பிரதிவாதிகளுக்கு இடையே பாகப்பத்திரம் எழுதப்பட்டுள்ளதாகவும், அது குறித்து ஏற்கனவே தனது சாட்சியத்தில் சொல்லாமல் விட்டுவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மனுவை பரிசீலனை செய்து பார்க்கையில் இவ்வழக்கானது கடந்த 2013 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்/வாதியை (PW1) குறுக்கு விசாரணை செய்ய வேண்டி நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்/வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை திரும்ப பெற்றுள்ளதாகவும், தாவா சொத்து தொடர்பாக கடந்த 21.05.2004 ல் வாதி மற்றும் 1, 3 பிரதிவாதிகளுக்கிடையே பாகப்பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளபடியால் அது குறித்து தனது சாட்சியத்தில் கூற வேண்டியது அவசியமாகிறது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 14–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.14 18:44:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.14 18:45:01 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 5/2023 இன்
அ.வ.எண்.162/2013
நாள் : 14.07.2025